# <u>தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு</u>

நாள் : 06.08.18

பெறுநர் : மாண்புமிகு மின்துறை,மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு,சென்னை

ஐயா,

பொருள் : தொழிற்சங்கம் – 12/3 உடன்படிக்கை –நடைமுறைப் படுத்துவதில் நீண்ட காலதாமதம்– உடனடி நடவடிக்கை எடுத்திட கோருவது தொடர்பாக–

**மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கனிவான பரிசீலனைக்கு,**

தமிழ்நாடு மின்வாரிய நிறுவனத்திற்கும் (TANGEDCO) தொழிற்சங்கங்களுக்கும் இடையே கடந்த 22.02.18 அன்று ஊதிய உயர்வு மற்றும் வேலைப்பளு தொடர்பான 12/3 உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின் அடிப்படையில் ஊதிய உயர்வு உடனடியாக வழங்கப்பட்டு இருந்தாலும் வேலைப்பளு குறித்து செய்துகொள்ளப்பட்ட கீழ்கண்ட விஷயங்கள் நடைமுறைக்கு வராமல் தேவையற்ற காலதாமதம் மின்வாரிய நிர்வாகத்தால் ஏற்படுத்தி வருவதாக உணர்கிறோம்.

இக்காலதாமதம் குறித்து உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டி அனைத்து தொழிற்சங்கங்களின் சார்பில் கடந்த 16.07.18 அன்று மின்வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களை சந்தித்து கீழ்கண்ட விஷயங்கள் குறித்து விரிவாக பேசினோம். தலைவர் அவர்களும் இக்கோரிக்கைகளின் நியாயத்தை உணர்ந்து ஒருவார காலத்திற்குள் நிறைவேற்றித்தருவதாக உறுதி அளித்தார்.

ஆனால் இதுநாள் வரை எவ்விதப் பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைத்தபாடில்லை. மேலும் முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு உட்பட்ட புதிய பதவிகள் ஒப்புதல் வழங்குவதற்குக் கூட அதற்கு சமமான மூன்று ஆண்டுகளுக்கு மேல் காலியாக இருக்கும் பதவிகளை ரத்து செய்யும் வகையில் முன்வடிவு அனுப்பினால் மட்டுமே புதிய பதவி ஒப்புதல் வழங்கும் நிலை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 110 – விதியின் கீழ் பொதுமக்கள் நலன் கருதி அறிவிப்பு செய்யப்பட்ட 10 மின்தடை நீக்க

மையங்களுக்குக் கூட 34 இளநிலை கணக்கு உதவியாளர் பதவிகளை ரத்து செய்து மின்தடை நீக்க மையங்களுக்கான புதிய பதவிகள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இப்பதவிகள் எல்லாம் நீண்டநாட்களாக பூர்த்தி செய்யப்படாமல் காலியாக இருந்தாலும்கூட, களப்பணியாளர்களை இப்பணியிடங்களில் டைவர்சன் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வந்ததை நிர்வாகம் கவனத்தில் கொண்டு செயல்பட்டதாக தெரியவில்லை. இதே போன்ற நிலை தொடர்ந்தால் நிர்வாகக் கட்டமைப்பு சீர்குலைய நேரிடும் என்று அஞ்சுகிறோம்.

எனவே இதுகுறித்து உரிய அறிவுரை வழங்கிடவும், உடன்படிக்கை ஏற்பட்டும் நீண்ட காலதாமதம் ஏற்படுத்திவரும் கீழ்க்கண்ட விஷயங்கள் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட ஆவண செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

1 ] புதிய வேலைப்பளு ஒப்பந்தத்தின்படி மின்இணைப்பு, மின்மாற்றிகள் எண்ணிக்கை குறித்து விநியோக வட்டங்களில் இருந்து விவரங்கள் கேட்டுப்பெற்று பிரிவு அலுவலகங்கள்,வருவாய் பிரிவு, அட்டைப்பட்டியல் பிரிவு, மற்றும் பண்டகப்பிரிவு ஆகியவற்றிற்கு புதிய பொறுப்பு அனுமதி வழங்கிடாமல், கடந்த ஐந்து மாதங்களாக காலதாமதப்படுத்தி வருவது தொழிலாளர் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்படுத்தி உள்ளது. எனவே உடனடியாக அனைத்து மின்வட்டங்களுக்கும் வேலைப்பளு ஒப்பந்தப்படி கூடுதல் பொறுப்புகள் வழங்கிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2 ] வேலைப்பளு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2000 மின்பாதை ஆய்வாளர் பதவிகள் அனைத்து கோட்டங்களுக்கும் சமமாக பதவி ஒப்புதல் வழங்கிட வேண்டும்.[குறிப்பாக ஒரு கோட்டத்திற்கு 11 மி.பா.ஆய்வாளர் வீதம் வழங்கிடலாம்]

3] ஏற்கனவே ஒப்பந்தத்தில் உள்ளபடி கிராமிய மற்றும் மலைப்பகுதி உபகோட்டங்களுக்கு கூடுதலாக 383 சிறப்புநிலை முகவர் பதவி உடனடியாக ஒப்புதல் வழங்கிட வேண்டும்.

4 ] வேலைப்பளு ஒப்பந்தப்படி இயக்கத்தில் உள்ள 230 கே.வி.,110 கே.வி., புதிய துணை மின் நிலையங்களுக்கு தேவையான பதவி ஒப்புதல்

கேட்டு வரப்பெற்றுள்ள முன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிர்வாகம் காலதாமதப்படுத்தி வருவது ஏற்புடையதாக இல்லை. இப்பணிகளை பிற பிரிவு அலுவலக களப்பணித் தொழிலாளர்களை வைத்து மேற்கொண்டு வருவதால் பிரிவு அலுவலகப்பணிகள் பாதிக்கப்பட்டு பொதுமக்களிடம் அதிருப்தி மேலோங்கி வருகிறது. எனவே தலைவர் அவர்கள் இதுவரை ஒப்புதல் கேட்டு வந்துள்ள 50–க்கும் மேற்பட்ட துணைமின் நிலையங்களுக்கு தேவையான பதவி ஒப்புதல்களை உடனடியாக வழங்கிடவேண்டும்.

5 ] ஊதிய உயர்வு மற்றும் வேலைப்பளு ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள 19 கணக்கு அதிகாரிகள் பதவி உருவாக்குதல், 110 கே.வி.துணை மின் நிலையங்களில் ஒப்புதல் அளிக்காமல விடுபட்டுள்ள AE/JE-I-Gr பதவிகள் ஒப்புதல் அளித்தல், வேதியிலர் மற்றும் செவிலியர்களுக்கு அரசுத்துறையில் பணியாற்றி வருபவர்களுக்கு இணையான ஊதியம் வழங்கிடுதல்,115–தொழில்நுட்ப உதவியாளர் • பதவிகள் புதிதாக ஒப்புதல் வழங்குதல்,156–மதிப்பீட்டு அலுவலர் பதவிக்கு விரைந்து பதவிஉயர்வு வழங்குதல் போன்ற விஷயங்களில் உடனடி கவனம் செலுத்தி உரிய உத்திரவுகள் பிறப்பித்திட வேண்டும்.

6 ] துவக்கநிலைப் பதவிகளில் உள்ள காலியிடங்களை நிரப்பிட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

G.Secy/Workers Federation. G.Secy/TNEB AESU G.Secy/TMTM

G.Secy/ Janatha T.sangam G.Secy/ INTUC(Xavier) G.Secy/ E.Sangam

G.Secy/ TNEB TPAS G.Secy/ TNEB Dr.AEU